## இயல் 6.4 - வடிவியல்

பயிற்சி எண் :: 6.4.3.5.A

வடிவியல் - பல்வகைத் திறனறிதல் - [தநாஅபு பயிற்சி 4.3.1-10]

## வடிவியல் - பல்வகைத் திறனறிதல் - [தநாஅபு பயிற்சி 4.3.1-10]

1. ஓர் இரு சமபக்க செங்கோண முக்கோணத்தின் கோணங்கள் யாவை?

(a) $35^\circ, 90^\circ, 35^\circ$ (b) $45^\circ, 90^\circ, 45^\circ$ ✓ (c) $60^\circ, 75^\circ, 60^\circ$ (d) $50^\circ, 90^\circ, 50^\circ$

2. 

இது ஒரு

(a) இரு சமபக்க செங்கோண முக்கோணம் (b) இரு சமபக்க குறுங்கோண முக்கோணம் (c) இரு சமபக்க விரிகோண முக்கோணம் ✓ (d) அசமபக்க செங்கோண முக்கோணம்

3. பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாதது எது?

(a) இரு சமபக்க விரிகோண முக்கோணம் (b) இரு சமபக்க குறுங்கோண முக்கோணம் (c) சமபக்க விரிகோண முக்கோணம் ✓ (d) சமபக்கக் குறுங்கோண முக்கோணம்

4. இருசமபக்க முக்கோணத்தின் ஒரு கோணம் $124^\circ$ எனில் மற்ற இரு கோணங்கள் யாவை?

(a) $26^\circ, 26^\circ$ (b) $28^\circ, 28^\circ$ ✓ (c) $25^\circ, 25^\circ$ (d) $32^\circ, 32^\circ$

5. 

இது ஒரு சதுரம். $A$ மற்றும் $C$ ஐ இணைத்து ஒரு கோடு வரைந்தால் உருவாகும் இரு முக்கோணங்கள் எவ்வகையைச் சார்ந்தவை?

(a) இரு சமபக்க குறுங்கோண முக்கோணம் (b) இரு சமபக்க செங்கோண முக்கோணம் ✓ (c) இரு சமபக்க விரிகோண முக்கோணம் (d) அசமபக்க செங்கோண முக்கோணம்

6. 

$AB$=6 செ.மீ அளவுள்ள கோட்டுத்துண்டு வரைக. அக்கோட்டுத்துண்டின் ஒவ்வொரு முனையிலும் $AB$ - க்குச் செங்குத்துகோடு வரைக. அவ்விரு செங்குத்துகோடுகளும் ஒன்றுக்கொன்று இணையாக உள்ளனவா?

(a) ஆம் ✓ (b) இல்லை

7. $90^\circ$:$90^\circ$:$0^\circ$ ஆகிய கோணங்களைக்கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க இயலுமா? ஏன்?

(a) இயலாது ✓ (b) இயலும்

ஏனெனில், மூன்றில் ஒரு கோணம் $0^\circ$. $0^\circ$ என்பது அதை அடுத்துள்ள இரு பக்கங்களையும் ஒன்றாகச்செய்துவிடும். அதனால் அது ஒரு முக்கோணமாக இல்லாமல் ஒரு திறந்த வடிவமாக மாறிவிடும். 

8. பின் வருவனவற்றுள் எது சரியான கூற்று? ஏன்?

(a) ஒவ்வொரு சமபக்க முக்கோணமும் ஒரு இருசமபக்க முக்கோணமாகும். ✓ (b) ஒவ்வொரு இருசமபக்க முக்கோணமும் ஒரு சமபக்க முக்கோணமாகும்.

ஏனெனில், இரு சமபக்க முக்கோணத்தின் விதி என்னவென்றால், மூன்றில் இரு பக்கங்கள் சமமாக இருக்க வேண்டும் என்பதே ! . . . மூன்றாவது பக்கமும் மற்ற இரு பக்கங்களுக்குச் சமமாக இருப்பது என்பது தற்செயலாக நிகழ்வது. ஆனால், எல்லா இரு சமபக்க முக்கோணங்களின் பக்கங்களும் ஒன்றுக்கொன்று சமமாக அமைய வாய்ப்பில்லை.

9. ஒரு இருசமபக்க முக்கோணத்தின் ஒரு கோணம் $70^\circ$ எனில் மற்ற இரு கோணங்களின் அளவுகள் என்னென்னவாக இருக்கலாம்?

(a) $45^\circ$ (b) $55^\circ$ ✓ (c) $65^\circ$ (d) $75^\circ$

இது ஒரு இருசமபக்க முக்கோணம் என்பதால் மீதமுள்ள இரு கோணங்களும் சமமாக இருக்க வேண்டும். எனவே மற்ற இரு கோணங்களின் மதிப்பு = $\frac{(180-70)}{2} = \frac{110}{2} = 55^\circ$

10. பின் வருவனவற்றுள் எவை இருசமபக்க முக்கோணத்தின் பக்கங்களாக அமையும்?

(a) 6 செ.மீ, 3 செ.மீ, 3 செ.மீ (b) 5 செ.மீ, 2 செ.மீ, 2 செ.மீ (c) 6 செ.மீ, 6 செ.மீ, 7 செ.மீ ✓ (d) 4 செ.மீ, 4 செ.மீ, 8 செ.மீ

Sum & solution prepared on Thursday 30th December, 2021 :: 17:24 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**